**தேதி :ஜனவரி** 21, 2014

# நிலைத்தன்மையும் அரசிலா நிலையும்

**- திரு அருண் ஜெய்ட்லி**

*எதிர்கட்சித் தலைவர் (மாநிலங்களவை)*

கடந்த வாரம் கற்றுக்கொள்ளும் அனுபவம் தந்த வாரமாக இருந்தது. மூன்று தலைவர்கள், தங்கள் பார்வையில் இந்தியாவின் குறிக்கோளாக முன்வைப்பவைகளை நான் தொடர்ந்து கவனித்துவந்தேன். .

ராகுல் காந்தி அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியில் நிகழ்த்திய உரை அவரது கட்சித் தொண்டர்களின் மன உறுதியை உயர்த்தும் நோக்கம் கொண்டதாக அமைந்திருந்தது. திக்கற்றவர்களாகத் தெரிகிறார்கள். . நடப்புச் சூழலில் பிரதமர் வேட்பாள்ர்.தேவையில்லை என்ற முடிவு அவர்களை உளவியல் ரீதியான சிக்கலில் ஆழ்த்தியுள்ளது. அவரது உரை வலியதாக இருந்தாலும் குறிப்பிட்ட எந்த ஒரு விஷயத்தையும் கவனப்படுத்தவில்லை.. .

பாஜக தேசிய கவுன்சில் கூடத்தில் நிகழ்த்தப்பட்ட நரேந்திர மோடியின் உரை மிகச் சிறந்த பேச்சாற்றுலடன் அமைந்திருதது. . அரசியல் வரையறைகள் சார்ந்ததாக மட்டும் அல்லாமல், அவர் இந்த வாய்ப்பை இந்தியாவுக்கான நன்மைபயக்கத்தக்க குறிக்கோளை முன்வைத்தார். விவாதத்தின் தளத்தை உயர்த்தினார். அவரது உரை பிரதம்ர் உரைக்கான தன்மைகளைக் கொண்டிருந்தது. கூட்டாட்சி தத்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவரது உரை நவீன மற்றும் வலிமையான இந்தியாவுக்கான குறிக்கோளை வெளிப்படுத்தியது. விவசாயத் துறை முதல் கல்வி மற்றும் சுகாதாரம் வரை அவர் நம்பிக்கை தரக்கூடிய யோசனைகள் அவரிடம் நிரம்பியிருக்கின்றன.ஒவ்வொரு மாநிலத்திலும் ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம் மற்றும் ஏ.ஐ.ஐ.எம்.எஸ் உள்ளிட்ட மிகச் சிறந்த கல்வி நிறுவனங்கள இருக்க வேண்டும். இந்தியாவின் எந்த வீடும் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கக் கூடாது. . தங்க நாற்கரத்தை, நெடுஞ்சாலைகள், தொழிற்பேட்டைகள், அதிவேக விரைவு ரயில்கள், 100 ஸ்மார்ட் நகரங்கள் ஆகியவற்றைக் கொண்ட வைர நாற்கரமாக மாற்றுவதன் மூலம் இந்தியாவின் முகப்பை மாற்ற முடியும். . வளங்களுக்கான முதல் உரிமை ஏழைகள் மற்றும்

வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே உரியது. இந்த உரை பாஜக மற்றும் நரேந்திர மோடியின் 2014 தேர்தல் பிரசாரத்தின் முக்கியமான சுவடாகும். .

மூன்றாவதாக ஆம் ஆத்மி கட்சியின் அரசியல். . மரபுசார்ந்த அரசியலுக்கான எதிர்ப்பின் எதிரிவினையாக இந்தக் கட்சி ஜனனமெடுத்துள்ளது மாற்று அரசிய்லைத் தருவதாக வாக்களித்தது. ஆனால் அரசியல் நிலையற்றதன்மைதான் அக்கட்சி உறுதியளித்த மாற்று அரசியல் என்பது தெளிவாகிவிட்டது. அம் ஆத்மி கட்சி தலைவராலேயே இது ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. கிளர்ச்சித் தலைவர் தெளிவாக இருக்கிறார். லோக்பால் இயக்கத்தில் சிபிஐ மத்திய அரசின் காவல்துறை என்றும் அது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கலாகாது என்றும் வாதிடப்பட்டது. அதே ஆட்கள் இப்போது  மாநில காவல்துறை அதன் தில்லியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று வாதிடுகிறார்கள். கட்சித் தலைவர் உதிர்த்த வார்த்தைகளில் நாகரிகம் தொணிக்க வில்லை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. சட்டத்தின் விதிகள் குறித்த அவமரியாதை, .(மால்வியா நகர் விவகாரத்தில்) அரசியல் சாகசத்தன்மை  தீவிர அகந்தை, பொது உரையாடலில் நாகரிகமின்மை, நிறுப்பட்டுவிட்ட அமைப்புகள் மீதான மிக குறைந்த அக்கறை ஆகியவற்றையே இதக் கட்சி வெளிப்படுத்தியுள்ளது. இந்தக் கட்சி காவல்துறையினரை சீருடையைக் கழற்றிவிட்டு கிளர்ச்சியில் கலந்துகொள்ளச் சொல்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரு அடிப்படைவாதக் குழு குடியரசு தினத்தைப் புறக்கணிக்க அழைப்பு விடுத்தது. இன்று தேசியக் கட்சியாக உயரத் துடிக்கும் ஒரு கட்சி குடியரசு தினத்தை பாதிப்பை ஏற்படுத்துவோம் என்று மிரட்டுகிறது. அரசியல்மைப்புக் கொள்கைகு இக்கட்சியின் நடத்தை சவால்விடுகிறது. காஷ்மீரத்தில் இருக்கும் பிரிவினைவாதிகளையும் சத்தீஸ்கரில் இருக்கும் மாவோயிஸ்டுகளையும் ஆதரிப்பவர்கள் இக்கட்சியின் உறுப்பினர்களில்  அடங்குவர்.

கடந்த ஆண்டு மாநிலங்களவையில், “கலகவாதிகளின் கூட்டமைப்பு” என்ற சொற்றொடரை நான் கேட்டபோது நடைமுறையில் இருக்கும் எந்த கட்டுப்பாடுக்கும் அடங்காத தனிக்காட்டு ராஜாக்களாக இருப்பதில் மிகுந்த விருப்பம் கொண்ட கலகவாதிகளுக்கு ஒரு கூட்டமைப்பு இருக்க முடியுமா என்று நான் பெருத்த சந்தேகம் கொண்டேன்.  பிரியர்களாக அதற்கான விடையை

இப்போது கண்டுபிடித்துவிட்டேன். கலகவாதிகளின் கூட்டமைப்பு தில்லியின் சாலைகளில் காணக் கிடைக்கிறது. அரசியல் நிலையற்றதன்மை மாற்று அரசியலாக முடியாது.